

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் "ஓரணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர் சேர்க்கை திட்டத்தினை முன்னின்று செயல்படுத்திய மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகளுக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் பாராட்டு தெரிவித்து வேட்டி அணிவித்தார். அருகில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் வி.ரவிச்சந்திரன், மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள் என்.சத்தியா, எஸ்.உதயகுமார், ஜெ.சத்தியசீலன, ஜி.எஸ்.சீனிவாசலு, வி.மணிஷ்குமார், தொகுதி ஒருங்கிணைப்பாளர் எக்ஸ்பிரஸ் எல்லப்பன், எம்.குமார், சி.முகுந்தன் ஆகியோர் உள்ளனர்.

### திருவள்ளூர் மத்திய மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், பகுதி

# பொறியாளர் அணி பொறுப்புக்கான நேர்காணல்!

## மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!



*திருவள்ளூர், ஆக. 24;*

*திருவள்ளூர் மத்திய மாவட்டம் மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் பொறியாளர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளருக்கான நேர்காணல் 26082025 அன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணி அளவில் ஆவடி ரயில் நிலையம் அருகில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட செயலாளரும் தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தலைமையில் நடைபெறுகிறது இதில் மண்டல மேற்பார்வையாளரும் மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளருமான முனைவர் சி.பிரதீப் நேர்காணலை நடத்தி வைக்கிறார்*

*இந் நிகழ்வில் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் எம்.மோகன் வரவேற்பில் மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகள் எஸ்.நிர்மல் ராஜ், இயேசு பாலன், வி.ஹரி, சக்திவேல் ராஜ், சர்மிளா தேவி ஆகியோர் இந்நிகழ்ச்சியினை ஒருங்கிணைக்கிறார்கள்.*

*அது சமயம் பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினரும். தலைமை செயற்குழு உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி. தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாவட்ட அவைத் தலைவர் மா.இராஜி, மாநில இளைஞரணி துணைச்செயலாளர் பிரபு கஜேந்திரன், மாநில சிறுபான்மை நல உரிமை பிரிவு இணை செயலாளர் சி. ஜெரால்டு, மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ். ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், மாவட்ட பொருளாளர் பா.நரேஷ்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ். ஜி.ராஜேந்திரன். ஜி. விமல்வர்ஷன். எம். முத்தமிழ்செல்வன், வி. குமார், ஜெ. மகாதேவன், காஞ்சனாசுதாகர், எஸ்.சங்கர் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்*

*எனவே திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநகர ஒன்றிய நகர பக்தி பேரூர் கழகச் செயலாளர்கள் தங்கள் பகுதியிலிருந்து ஒன்றிய நகர பேரூர் பொறியாளர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பொறுப்புக்கான விண்ணப்பித்தவர்களை தவறாமல் அழைத்து வருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்*

*(குறிப்பாக டிப்ளமோ மற்றும் பொறியாளர் சம்பந்தப்பட்ட படித்தவர்களாக இருக்க வேண்டும் ) என மாவட்ட கழகச் செயலாளரும் அமைச்சருமான ஆவடி சாமு.நாசர் அறிக்கை வாயிலாக தெரிவித்துக் கொண்டார்.*

---



# தி.மு.க. இளைஞர் அணி

## சென்னை தெற்கு மாவட்ட நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம்!

மாவட்டம்–மாநகரம்–ஒன்றியம்–நகரம்–பகுதி–பேரூர் ஆகிய கழக அமைப்புகளில் இளைஞர் அணிக்கு ஏற்கெனவே நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், கழகத்தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், தலைமைக்கழக ஒப்புதலுடன் தற்போது ஒன்றியத்துக்குட்பட்ட கிளைகளிலும் நகர–பகுதி–பேரூர் வட்டங்களிலும் மற்றும் அனைத்து பாகங்களிலும் இளைஞர் அணிக்கு அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படுகின்றனர்.

அந்த வகையில், சென்னை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட விருகம்பாக்கம், மதுரவாயல் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பகுதி, ஒன்றிய, வட்ட, கிளை, பாக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், 24.08.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில், அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெறவுள்ளது. சென்னை தெற்கு மாவட்டத்தில் இந்த இரண்டு தொகுதிகளைச் சேர்ந்த இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**அன்பகம்**
தேனாம்பேட்டை,
சென்னை-18.
நாள் : 23-08-2025

கலைஞர் 100 1924 - 2023



---

### பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி. தலைமையில் –

# 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்ட பி.எல்.ஏ.2 - பி.எல்.ஏ. - நிர்வாகிகளுக்கு பரிசு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்!

*சென்னை, ஆக. 24 -*

*சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி சைதை கிழக்கு பகுதி திமுக சார்பில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்ட பி.எல்.ஏ2, பி.டி.ஏ, மற்றும் நிர்வாகிகளுக்கு பரிசளிப்பு விழா நடைபெறுகிறது. இதில் பகுதி செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி. தலைமையில் அமைச்சர் மா.சுப்பகரமணியன் பரிசுகள் வழங்குகிறார்.*

*கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் படியும் இளம் தலைவர் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தல் படியும் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையில் சிறப்பாக செயல்பட்டு பகுதிக்கு ஒதுக்கப்பட்ட இலக்கையும் தாண்டி கழக உறுப்பினராக சேர்த்த சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி சைதை கிழக்கு பகுதியில் உள்ள பாக முகவர்கள் (பி.எல்.ஏ 2 ) பாக டிஜிட்டல் முகவர்கள் (பி.டி.ஏ) மற்றும் நிர்வாகிகளுக்கு அந்த அந்த வட்டக் கழக செயலாளர்கள் தலைமையில் சிறப்பு பரிசுகள் வழங்கி கௌரவிக்கும் விழா சைதை கிழக்கு பகுதி செயலாளரும் 13வது மண்டல வார்டு குழு தலைவருமான இரா.துரைராஜ் தலைமையில் நாளை 25.08.2025 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு கிண்டி நரசிங்கபுரம் சக்கரபாணி சாலையில் உள்ள சமூக நலக் கூடத்தில் வைத்து நடைபெற உள்ளது.*

*விழாவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு சைதை கிழக்கு பகுதியில் உள்ள பி.எல்.ஏ2 , பி.டி.ஏ. மற்றும் கழக நிர்வாகிகளுக்கு பரிசுகள் வழங்கி சிறப்பிக்கிறார்.*

*எனவே நமது சைதை கிழக்கு பகுதியில் உள்ள பாக முகவர்கள் மற்றும் பாக டிஜிட்டல் முகவர்கள் மற்றும் பாகத்தில் உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்ட பட்டியலில் உள்ள நிர்வாகிகள் அந்த அந்த வட்ட கழக செயலாளர்கள் தலைமையில் காலை 10.00 மணிக்கே வருகை தந்து அவர் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இருக்கையில் அமர்ந்து விழாவை சிறப்பிக்க வேண்டும் என கேட்டுக் கொள்வதாக சைதை கிழக்கு பகுதி செயலாளரும் 13வது மண்டல வார்டு குழு தலைவருமான இரா.துரைராஜ் எம்.சி. வேண்டுகோள் விடுத்துள்ளார்.*



சோழிங்கநல்லூர் மண்டலம், கண்ணகி நகரில், பணிக்குச் செல்லும் வழியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த தூய்மைப் பணியாளர் திருமதி வரலட்சுமியின் உடலுக்கு துணை மேயர் மு.மகேஷ்குமார் மாலை வைத்து மரியாதை செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். இந்நிகழ்வின்போது, சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், இணை ஆணையாளர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப. ஜெயசீலன், மண்டலக்குழுத் தலைவர் வி.இ.மதியழகன், மாமன்ற உறுப்பினர் ஏகாம்பரம் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

---

### சென்னை வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, மேற்கு, தென்மேற்கு, தெற்கு - காஞ்சிபுரம் வடக்கு - திருவள்ளூர் கிழக்கு, மத்திய, வடக்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட

# மாவட்டச் செயலாளர்கள் - சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் கூட்டம்!

## துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி. அறிவிப்பு!



சென்னை வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, மேற்கு, தென்மேற்கு, தெற்கு - காஞ்சிபுரம் வடக்கு - திருவள்ளூர் கிழக்கு, மத்திய, வடக்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட மாவட்டச் செயலாளர்கள் - சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் கூட்டம் வருகிற 01.09.2025, திங்கட்கிழமை, காலை 10.30 மணியளவில் சென்னை, தியாகராயர் நகர், ஓட்டல் அகார்டில் நடைபெறும்.

அதுபோது மேற்குறிப்பிட்ட மாவட்டங்களுக்குட்பட்ட மாவட்டச் செயலாளர்கள் - சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் அனைவரும் தவறாது இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18
நாள்- 23-08-2025.

**ஆ. இராசா, எம்.பி.,**
துணைப் பொதுச்செயலாளர்,
தி.மு.க.

---

### கண்ணகி நகரில் – மின்சாரம் தாக்கி

# தூய்மைப் பணியாளர் மறைவு!

## மேயர் ஆர்.பிரியா - துணை மேயர் மு.மகேஷ்குமார் அஞ்சலி!

சென்னை, ஆக.24-

சோழிங்கநல்லூர் மண்டலம், கண்ணகி நகர் பகுதியில் பணிக்குச் செல்லும் வழியில் மின்சாரம் தாக்கி மரணம் அடைந்த தூய்மைப் பணியாளர் திருமதி வரலட்சுமி அவர்களின் உடலுக்கு மேயர் திருமதி ஆர்.பிரியா, நேற்று (23.08.2025) மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தினார்.

நேற்று (23.08.2025) மேயர் திருமதி ஆர்.பிரியா, சோழிங்கநல்லூர் மண்டலம், கண்ணகி நகரில், பணிக்குச் செல்லும் வழியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த தூய்மைப் பணியாளர் திருமதி வரலட்சுமியின் உடலுக்கு மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

மேலும், துணை மேயர் மு.மகேஷ் குமார் மறைந்த தூய்மைப் பணியாளர் திருமதி வரலட்சுமி அவர்களின் உடலுக்கு மலர் மாலை வைத்து மரியாதை செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், ஆணையாளர் ஜெ.குமர குருபரன், இணை ஆணையாளர் (சுகாதாரம்) முனைவர் வீ.ப. ஜெயசீலன், மண்டலக்குழுத் தலைவர் வி.இ. மதியழகன், மாமன்ற உறுப்பினர் ஏகாம்பரம் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### வழக்கறிஞர் அ.மு. அசன் முகம்மது
### ஆகஸ்ட் 24 (2016)



**இளம் வயதிலேயே திராவிட இயக்கத்தின்மீது பற்று கொண்டு, மாவட்டப் பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட வழக்கறிஞர் அணி புரவலர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**கவிதை, கட்டுரை எழுதுவதில் வல்லவரான இவர், மிசா நெருக்கடி காலத்தில், கழக நாளேடான 'முரசொலி'யில் துணை ஆசிரியராகப் பணியாற்றியவர்.**

**திருவாரூர் மாவட்டம், அத்திக்கடை ஊராட்சி துணைத் தலைவராகப் பொறுப்பேற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**இந்தி எதிர்ப்பு போராட்டம் முதல் கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திமிரி நா. சீனிவாசன்
### ஆகஸ்ட் 24 (2018)



**தனது இளம் வயதிலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்**

**இருபது ஆண்டுகளுக்கும் மேலாக திமிரி ஒன்றியக் கழகச் செயலாளராக தொடர்ந்து பணியாற்றியவர். தலைமைச் செயற்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**